முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA3 பரீட்சை – 2018 சனவரி

## (AA35) கூட்டிணைப்பு மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate and Personal Taxation)

2018-01-21
பிற்பகல்
[1.45 – 5.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்களின் எண்ணிக்கை: 09
வினாக்களின் எண்ணிக்கை: 09

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும், கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களைப் பாவித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்..*

---

## பகுதி A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

"இலாபங்கள் அல்லது வருமானம் என்பது ஏதேனும் காலப்பகுதிக்கு ஏதேனும் மூலத்திலிருந்து கிடைப்பதும் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணிக்கப்பட்டதுமான தேறிய இலாபங்கள் அல்லது வருமானம் என்று பொருளாகும்."

**நீங்கள் செய்யவேண்டியது:**

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி ஐந்து (05) வருமான மூலங்களைக் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

### வினா 02

**செனரத்** ஒரு வதிவுள்ள தனியாள் ஆவதுடன் அவர் 2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்கான வருமான வரித் திரட்டினை உரிய காலத்தில் சமர்ப்பித்திருந்தார். உதவி ஆணையாளர் அத்திரட்டினை நிராகரித்து வரி மதிப்பீடொன்றை அனுப்பினார். நீங்கள் **செனரத்தின்** வரி ஆலோசகர் ஆவதுடன் **செனரத்தின்** வரி மதிப்பீட்டிற்கு எதிராக மேன்முறையீடு செய்ய விரும்புகிறீர்கள்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

வரி மதிப்பீட்டிற்கு எதிராக செல்லுபடியான மேன்முறையீடொன்றைச் செய்வதற்கு திருப்திப்படுத்த வேண்டிய மூன்று (03) நிபந்தனைகளைக் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**வரை. சுனிமல் புளோரா (தனி.) கம்பனி** இலங்கையில் வர்த்தகத்திற்கான மலர் வளர்த்து மலர் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் கம்பனி ஒன்றாகும். கம்பனியின் பதிவேடுகளிலிருந்து 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

| | ரூ. |
|---|---|
| மலர் விற்பனை – ஏற்றுமதிகள் | 17,600,000 |
| மலர் விற்பனை – உள்ளூர்ச் சந்தைக்கு | 72,400,000 |
| அலுவலக தளபாட விற்பனைப் பெறுவனவுகள் | 996,000 |
| நிலையான வைப்பிலிருந்து வட்டி வருமானம் | 457,000 |
| | **91,453,000** |

**நீங்கள் செய்யவேண்டியது:**

2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்குச் செலுத்தவேண்டிய பொருளாதார சேவைகள் கட்டணத்தை (ESC) **மதிப்பிடுக.**

(05 புள்ளிகள்)

## வினா 04

2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ரண்தரு விளையாட்டுக் கழகத்தின்** வருமானக் கூற்றின் பிரித்தெடுப்பு பின்வருமாறு:

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| அங்கத்துவக் கட்டணம் | 2,165,000 | |
| வட்டி (தேறியது) – நிலையான வைப்புகள் | 224,000 | |
| அங்கத்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களிலிருந்து வட்டி | 146,000 | 2,535,000 |
| வருமான வரிக்கு அனுமதிக்கக்கூடிய செலவுகள் | | (1,894,000) |
| **செலவுக்கு மிஞ்சிய வருமானம்** | | **641,000** |

**நீங்கள் செய்யவேண்டியது:**

**ரண்தரு விளையாட்டுக் கழகம்** 2016/17 வரிமதிப்பாண்டிற்காக வியாபாரம் ஒன்றைச் செய்துள்ளதாகக் கருதமுடியுமா என்பதை **அடையாளம் காண்க.**

*(தேவைப்படுத்தப்பட்ட கணிப்பீடுகளைக் காட்டுதல் வேண்டும்.)* (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

பெறுமதிசேர் வரிக்கு (பெ.சே.வ.) பதிவுசெய்யப்பட்ட **வரை. மீரா (தனி.) கம்பனி** பைகளை (bags) உற்பத்திசெய்து விற்பனைசெய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. கம்பனியின் பதிவேடுகளில் இருந்து 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன:

(1) விற்பனை (பெ.சே.வ. தவிர்த்து):

| | |
|---|---|
| நேரடி ஏற்றுமதி (USD 1 = ரூ.150/-) | USD 8,000 |
| உள்ளூர் வாடிக்கையாளர்களுக்கான விற்பனை – SVAT க்கு பதிவுசெய்யப்பட்டோர் | ரூ.758,400/- |
| உள்ளூர் வாடிக்கையாளர்களுக்கான விற்பனை – ஏனையோர் | ரூ.4,161,600/- |

(2) செலுத்தப்பட்ட உள்ளீட்டு (VAT) வரி:

| | **ரூ.** |
|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் மீது | 364,500 |
| உள்ளூர் கொள்வனவுகளின் மீது | 245,500 |

(3) கம்பனி காலாண்டிற்காக தவணைக்கட்டண அடிப்படையில் ரூ.10,000/- செலுத்தியிருந்தது.

(4) SVAT விற்பனைகளின் மீது ரூ.113,760/- க்கான இலகுபடுத்தப்பட்ட பெ.சே.வ. வரவு வவுச்சர்கள் (SVCV) பெறப்பட்டிருந்தன.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகச் செலுத்தப்பட வேண்டிய மீதி (மேலதிகமாகச் செலுத்தப்பட்ட) பெறுமதிசேர் வரியினை (பெ.சே.வ.) **மதிப்பிடுக.** (08 புள்ளிகள்)

(b) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பெ.சே.வ. திரட்டினைச் சமர்ப்பிப்பதற்கான உரிய திகதியைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**சகன்** மற்றும் **பகன்** ஆகியோர் **''பிஸ்னஸ் சொலூசன்ஸ்''** பங்குடமை வியாபாரத்தின் பங்காளர்கள் ஆவதுடன் முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகளை வழங்கும் வியாபாரத்தினை நடத்திவருகின்றனர். அவர்கள் இலாப – நட்டங்களை 2 : 1 என்ற விகிதாசாரத்தில் பகிர்ந்து கொள்வதற்கு உடன்பட்டனர். 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் வருமானக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது:

**2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் வருமானக் கூற்று**

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| ஆலோசனைச் சேவைகள் | | 21,500,000 |
| கட்டடம் மீதான வாடகை வருமானம் | | 120,000 |
| நிலையான வைப்பு மீதான வட்டி – தேறியது | | 5,520 |
| | | **21,625,520** |
| **செலவுகள்:** | | |
| பங்காளர்களுக்குச் செலுத்திய சம்பளம் | | |
| **சகன்** | 250,000 | |
| **பகன்** | 250,000 | |
| ஊழியர் சம்பளம் | 3,567,000 | |
| கட்டடத்திற்கான சோலைவரி | 30,000 | |
| கணக்கீட்டுப் பெறுமானத் தேய்வு | 48,000 | |
| ஏனைய செலவுகள் - வரித் தேவைக்காக அனுமதிக்கத்தக்கவை | 3,588,000 | (7,733,000) |
| **நிகர இலாபம்** | | **13,892,520** |

**குறிப்புகள்:**

(1) 2015 ஏப்ரல் 01 இல் கணினியொன்று ரூ.400,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டது. வரித் தேவைகளுக்காக 2016 ஏப்ரல் 01 இல் இருந்த ஏனைய எல்லாச் சொத்துக்கள் மீதும் பூரணமாக தேய்மானம் செய்யப்பட்டது.

(2) கட்டடத்தின் அரைப்பங்கு வேறொரு மூன்றாம் ஆளுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. முழுக் கட்டடத்திற்குமான சோலைவரி பங்குடமையினால் செலுத்தப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) வரிமதிப்பாண்டு 2016/17 இற்கான பங்குடமையின் பிரிபடத்தக்க இலாபத்தைக் **கணிப்பிடுக.**
(05 புள்ளிகள்)

(b) வரிமதிப்பாண்டு 2016/17 இற்காக பங்குடமை செலுத்தவேண்டிய வருமான வரியைக் **கணிப்பிடுக.**
(05 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(A) **சிறிமேவன்** வயது 58 வருடங்கள், ஓய்வுபெற்ற அரச ஊழியரொருவர் ஆவதுடன் தான் பங்குபற்றும் ஒவ்வொரு சபைக் கூட்டங்களுக்கும் **வரை. சுகத (தனி.) கம்பனியிலிருந்து** பணிப்பாளர் கட்டணமாக ரூ.40,000/- பெற்றுக்கொள்கிறார். உ.பொ.செ. (PAYE) தேவைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட சம்பளப் பட்டியலில் அவர் **வரை. சுகத (தனி.) கம்பனியின்** ஊழியர் ஒருவராகக் கருதப்படவில்லை. அவர் அத்தகைய கூட்டங்களில் பங்குபற்றியமைக்காக 2016/17 ஆம் வரிமதிப்பாண்டு காலப்பகுதியில் பணிப்பாளர் கட்டணமாக ரூ.369,600/- (வரி கழிக்கப்பட்டு தேறியது) பெற்றுக்கொண்டார். அத்துடன் 2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்கு நிலையான வைப்புக் கணக்கிலிருந்து வட்டி வருமானம் ரூ.92,000/- (வரி கழிக்கப்பட்டு தேறியது) பெற்றுக்கொண்டார். அவர் அதே வரிமதிப்பாண்டு காலப்பகுதியில் லொத்தர் ஒன்றிலிருந்து ரூ.720,000/- (வரி கழிக்கப்பட்டு தேறியது) பணப் பரிசொன்றையும் வெற்றி கொண்டார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்காக **சிறிமேவனின்** மேலுள்ள ஒவ்வொரு வருமான மூலத்திலிருந்தும் கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரியை (WHT) **கணிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(B) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ், தனியாள் ஒருவர் பிள்ளை ஒன்றாகக் கருதப்படுவதற்கு திருப்திப்படுத்த வேண்டிய இரண்டு (02) நிபந்தனைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரை. ஆன் (தனி.) கம்பனி** வதிவுள்ள கம்பனியொன்றாவதுடன் மின்சார உபகரணங்களை உற்பத்தி செய்து உள்ளூர்ச் சந்தைக்கு விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது.

(1) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றின் சாரம் பின்வருமாறு:

| | ரூ. |
|---|---|
| விற்பனை | 246,000,000 |
| விற்பனைக் கிரயம் | (198,040,000) |
| **மொத்த இலாபம்** | **47,960,000** |
| ஏனைய வருமானம் | 2,110,000 |
| நிர்வாகச் செலவுகள் | (25,450,000) |
| விநியோகச் செலவுகள் | (9,302,000) |
| நிதிச் செலவுகள் | (3,120,000) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | **12,198,000** |

(2) ஏனைய வருமானங்களின் சுருக்கம் பின்வருமாறு:

| | ரூ. |
|---|---|
| பட்டியல்படுத்தப்பட்ட தனிச்சங்கள் (debentures) மீது வட்டி வருமானம் | 1,700,000 |
| நிலையான சொத்துக்கள் விற்பனை மீது இலாபம் | 210,000 |
| முன்னைய ஆண்டுகளில் பதிவழிக்கப்பட்டு வரித் தேவைக்காக அனுமதிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன்களிலிருந்து மீள அறவிடப்பட்ட அறவிடமுடியாக் கடன் | 200,000 |
| | **2,110,000** |

(3) நிர்வாகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது:

- வாடகைச் செலவுகளில் அடுத்த வரிமதிப்பாண்டிற்காகச் (2017/18) செலுத்தப்பட்ட மூன்று மாத முற்பண வாடகை ரூ.525,000/- உள்ளடக்கப்பட்டுள்ளது.
- 2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்காக தாக்கல் செய்யப்பட்ட கணக்கீட்டுப் பெறுமானத் தேய்வு ரூ.4,105,000/- ஆகும்.
- சுகாதார அதிகாரசபைகளின் சட்ட, ஒழுங்கு விதிகளை மீறியமைக்காக வருடத்தின் காலப் பகுதியில் கம்பனி செலுத்திய தண்டப்பணம் ரூ.150,000/-.
- வருடத்திற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூ.876,000/- ஆகும்.

(4) விநியோகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது:

- வரிமதிப்பாண்டுக் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் கொள்வனவாளர்களுடனான பேச்சுவார்த்தைக்காக கம்பனியின் விற்பனைக் குழுவொன்று ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்டது. குழுவுக்கான விமானச்சீட்டுக் கொள்வனவுக் கிரயம் ரூ.354,000/- ஆகும். 2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்கு வியாபாரத்திலிருந்தான நியதிச்சட்ட வருமானம் ரூ.16,900,000/- ஆகும்.
- மொத்த விளம்பரச் செலவு ரூ.343,000/- ஆவதுடன் கணக்காளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கான பத்திரிகை விளம்பரத்திற்குச் செலவிடப்பட்ட தொகை ரூ.63,000/- அதனுள் உள்ளடக்கப் பட்டுள்ளது.
- வருட காலப்பகுதியில் **வரை. ஆன் (தனி.) கம்பனி** ரூ.3,000,000/- பெறுமதியான மோட்டார் லொறியொன்றினைச் சுகாதார அமைச்சுக்கு நன்கொடையாக வழங்கியது.

(5) நிதிச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:

| | ரூ. |
|---|---|
| குத்தகை வட்டி | 325,000 |
| மேலதிகப்பற்று வட்டி | 428,000 |

(6) 2017 மார்ச் 31 இல் இருந்தவாறான சொத்துக்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| **சொத்துகள்** | **கிரயம் (ரூ.)** |
|---|---|
| மோட்டார் லொறி **(குறிப்பு 1)** | 6,500,000 |
| ஆண்டின் காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட குளிரூட்டி | 150,000 |
| புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டடத்தில் உபயோகிப்பதற்காக ஆண்டின் காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் | 825,000 |
| நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டடத்திற்காக ஏற்பட்ட கிரயம் **(குறிப்பு 2)** | 65,000,000 |

**குறிப்பு 1**

மோட்டார் லொறியொன்று நிதிக் குத்தகை ஒப்பந்தமொன்றின் கீழ் 2012 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து ஐந்து (05) வருட காலத்திற்கு பெறப்பட்டிருந்தது. மாதாந்தக் குத்தகை வாடகை ரூ.160,000/- ஆவதுடன் 2016/17 ஆம் வரிமதிப்பாண்டுக் காலப்பகுதியில் 9 தவணைக்கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. குத்தகைச் சொத்துக்களிலிருந்து இந்த லொறியின் கிரயம் ரூ.6,500,000/-, இறையிலி (freehold) ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கு மாற்றப்பட்டது.

**குறிப்பு 2**

**வரை. ஆன் (தனி.) கம்பனி** அலுவலகத்திற்கான கட்டடமொன்றை நிர்மாணித்து வருவதுடன் அது 2017 நவெம்பர் மாதத்தில் நிறைவு செய்யப்படும்.

**குறிப்பு 3**

2014 யூன் மாதம் ரூ.2,000,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட லொறியொன்று ஆண்டின் காலப்பகுதியில் ரூ.1,500,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. மேற்படி சொத்து விபரங்களுக்குள் அந்த லொறியின் கிரயம் உட்படுத்தப்படவில்லை.

**குறிப்பு 4**

2016 ஏப்ரல் 1 ஆந் திகதியில் இருந்த ஏனைய சொத்துக்கள் மீது வரிநோக்கத்திற்காக பெறுமானத்தேய்வு விடுதொகை பூரணமாகக் கோரப்பட்டுள்ளது.

(7) ஆண்டின் காலப் பகுதியில் ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு ரூ.645,000/- பணிக்கொடையாகச் செலுத்தப் பட்டது.

(8) வியாபாரத்தின் ஏனைய எல்லாச் செலவுகளும் வரி நோக்கத்திற்காக அனுமதிக்கத்தக்கனவாகும்.

(9) 2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்கு சுய வரி மதிப்பீட்டு அடிப்படையில் செலுத்தப்பட்ட வருமானவரி ரூ.400,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்கு பின்வருவனவற்றை **மதிப்பிடுக**:

(a) மொத்த நியதிச்சட்ட வருமானம்

(b) வரிமதிக்கத்தக்க வருமானம்

(c) வரிவிதி வருமானம்

(d) செலுத்தவேண்டிய மொத்த வரி

(e) செலுத்தவேண்டிய மீதி வரி

**மு.கு.:** ஏதேனும் செலவுகள் அனுமதிக்கப்படுவதற்கான அல்லது அனுமதிக்கப்படாமைக்கான காரணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். (25 புள்ளிகள்)

**வினா 09**

**சுதேஸ்** ஒரு பட்டயக் கணக்காளர் ஆவதுடன் வதிவுள்ள தனியாள் ஒருவர் என்ற அடிப்படையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வருமான வரித் திரட்டினைச் சமர்ப்பிக்கிறார். 2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்கான (இதன் பின்பு வருடம் எனக் குறிப்பிடப்படும்) அவர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(1) **சுதேஸ்** முன்னிலை வங்கியொன்றின் பிரதம நிதி அலுவலராகக் கடமையாற்றுகிறார். வருட காலப்பகுதியில் தொழில்தருநரால் அவருக்கு வழங்கப்பட்ட நன்மைகள் பின்வருமாறு:

- மொத்தச் சம்பளம் - மாதாந்தம் ரூ.250,000/-.
- வாகனப் படி (allowance) - மாதாந்தம் ரூ.60,000/-.
- வைத்தியக் காப்புறுதிக் கட்டணம் - மாதாந்தம் ரூ.5,000/-.

(2) அவர் தொழில்தருநரால் வழங்கப்பட்ட வாடகையற்ற வீடொன்றில் வசிப்பதுடன் தொழில்தருநரால் அவ்வீட்டின் உரிமையாளருக்கு மாதாந்தம் ரூ.20,000/- செலுத்தப்பட்டது. அவ்வீட்டின் சோலைவரி மதிப்பீடு ரூ.100,000/- ஆவதுடன் தொழில்தருநரால் 25% இல் சோலைவரி செலுத்தப்பட்டது.

(3) **சுதேஸ்** தனது சொந்த வீட்டினை ரூ.50,000/- மாதாந்த வாடகைக்குக் கொடுத்துள்ளார். அவ்வீட்டின் சோலைவரி மதிப்பீடு ரூ.200,000/- ஆவதுடன் சோலைவரி 30% இல் செலுத்தப்பட்டது. வருடக் காலப்பகுதியில் இவ்வீட்டினைத் திருத்துவதற்கு ரூ.90,000/- இனை அவர் செலவிட்டிருந்தார்.

(4) இவ்வருட காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனி ஒன்றிலிருந்து தேறிய (net) பங்கிலாபமாக ரூ.90,000/- இனைப் பெற்றுக்கொண்டார்.

(5) அவர் இலங்கை வங்கியில் ரூ.1,000,000/- இனை நிலையான வைப்புக் கணக்கொன்றில் வைப்பிலிட்டார். வங்கியானது 2.5% இல் நிறுத்திவைத்தல் வரியைக் கழித்த பின் ரூ.68,250/- இனை அந்த வருடத்திற்கான வட்டியாக அவரது கணக்கில் வரவுவைத்தது.

(6) வருட காலப்பகுதியில் **சுதேஸ்** தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து வீடொன்றைக் கட்டுவதற்காக வீட்டுக் கடனொன்றைப் பெற்றிருந்தார். அவர் ரூ.241,000/- மற்றும் ரூ.200,000/- ஆகிய தொகைகளை முறையே வட்டியாகவும் கடன் மீள்கொடுப்பனவாகவும் செலுத்தியிருந்தார்.

(7) தேவைப்பாடுள்ள பிள்ளைகளுக்கு நிறுவனரீதியான பராமரிப்பு வழங்குகின்ற அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனமொன்றிற்கு ரூ.80,000/- நன்கொடை வழங்கியிருந்தார்.

(8) வருடத்திற்காகக் கழிக்கப்பட்ட உ.போ.செ. வரி (PAYE) ரூ.197,600/- ஆகும்.

மேலே தரப்பட்ட தகவல்களிலிருந்து,

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்கு **சுதேஸ்** இற்காகப் பின்வருவனவற்றை **மதிப்பிடுக.**

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்தவேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்தவேண்டிய மீதி வரி, மற்றும்

(d) வரிவிலக்கு வருமானம், ஏதேனும் இருப்பின் (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |